**TAMILNADU SCHOOL EDUCATION DEPARTMENT**


# EMIS portal-ல் STUDENT PROMOTION செய்வது எப்படி?

**PRECAUTIONARY STEPS (முன் எச்சரிக்கை நடவடிக்கைகள்):**

1. தங்கள் பள்ளியின் **Highest/Terminal Class** மாணவர்களுக்கு **TC** வழங்கி, அந்த **Highest/Terminal Class** காலியாக இருப்பதை உறுதி செய்யவும்.
   எ.கா:- *மேல்நிலைப்பள்ளியில் **(10 & 12 - Highest/Terminal Class)**
   *உயர்நிலைப்பள்ளியில் **(10 - Highest/Terminal Class)**
   *நடுநிலைப்பள்ளியில் **(8 - Highest/Terminal Class)**
   *தொடக்கப்பள்ளியில் **(5 - Highest/Terminal Class)**
2. **Students Promotion** இறங்குவரிசையில் **(Decreasing Order)** மட்டுமே செய்ய வேண்டும்.
   எ.கா:- உயர்நிலைப்பள்ளியில் **(High School_Class 6 to 10)**
   **(9-**ஆம் வகுப்பு மாணவர்களை **10-**ஆம் வகுப்பிற்கு **Promote** செய்தபின், **8-**ஆம் வகுப்பு மாணவர்களை **9-**ஆம் வகுப்பிற்கு **Promote** செய்யவும்.
   அதன்பிறகு, **7-**ஆம் வகுப்பு மாணவர்களை **8-**ஆம் வகுப்பிற்கு **Promote** செய்யவும். பிறகு, **6-**ஆம் வகுப்பு மாணவர்களை **7-**ஆம் வகுப்பிற்கு **Promote** செய்யவும். இறுதியாக, வகுப்பு **6** காலியாக இருக்கும்.)
3. ஒருமுறை **Students Promotion Option-**ஐ பயன்படுத்தி **Promote** செய்யப்பட்ட மாணவர்களுக்கு, மறுமுறை **Promote Option-**ஐ உபயோகிக்க இயலாது.


## STEP 1:

www.emis.tnschools.gov.in/login **URL-ல்** தங்கள் பள்ளியின் **username** மற்றும் **password-ஐ** பயன்படுத்தி **Login** செய்யவும்.



**STEP 2:**


**Students Menu-வில் Students Promotion Option-ஐ Click செய்யவும்.**



## STEP 3:


**திரையில் உள்ள From பகுதியில் தங்கள் பள்ளியின் Terminal Class-க்கு முந்தைய வகுப்பினை Class & Section-ல் தேர்வு செய்யவும். Get Students List-ஐ Click செய்யவும்.**

**அப்பொழுது Students in selected class களத்தில் அவ்வகுப்பு மாணவர்களின் பட்டியல் திரையில் உள்ளவாறு தோன்றும்.**




## STEP 4:

- **To** பகுதியில் **Promote** செய்ய வேண்டிய **Class & Sec**-ஐ தேர்வு செய்யவும்.
- **Double Right Arrow( >>)**-வினை **Click** செய்தவுடன் மாணவர்களின் பட்டியல் **"Students to be Promoted"** களத்திற்குச் சென்றுவிடும்.
- **To** பகுதியில் உள்ள குறிப்பிட்ட **Class & Sec**-க்கான **Medium (for all classes)** மற்றும் **Group ( only for class 11,12)** சரிபார்த்து **promote** செய்யவும்.





**1. ஒரு குறிப்பிட்ட வகுப்பு மற்றும் பிரிவு (e.g.,9A) அனைத்து மாணவர்களையும் ஒரே நேரத்தில், அடுத்த வகுப்பிற்கு ஒரே பிரிவில் (10A) மாற்ற வேண்டுமெனில் double right arrow(>>)-வினை click செய்து மாற்றிக்கொள்ளலாம்.**



**2. ஒரு வகுப்பு மாணவர்களை ஒரே பிரிவில் இருந்து(9A) அடுத்த உயர்வகுப்பின் வெவ்வேறு பிரிவிற்கு (10A & 10B) மாற்ற வேண்டுமெனில்,**

- முதலில் குறிப்பிட்ட மாணவர்களை **select** செய்து, **single right arrow (>)**-வினை **click** செய்து **To** பகுதியில் **Promote** செய்ய வேண்டிய **Class (10) & Sec (A)**-ஐ தேர்வு செய்து, **Promote** செய்யலாம் .
- பிறகு, குறிப்பிட்ட மாணவர்களை **select** செய்து, **single right arrow (>)**-வினை **click** செய்து **To** பகுதியில் **Promote** செய்ய வேண்டிய **Class (10) & Sec (B)**-ஐ தேர்வு செய்து, **Promote** செய்யலாம் .






**STEP 5:**


- திரையில் உள்ள **Promote Icon-ஐ Click** செய்தால், **Confirmation Message** தோன்றும். **"Yes"** என்று **click** செய்தபின், மாணவர்கள் குறிப்பிட்ட வகுப்பிற்கு **Promote** செய்யப்படுவார்கள்.

(ஒருமுறை **Students Promotion Option-ஐ** பயன்படுத்தி **Promote** செய்யப்பட்ட மாணவர்களுக்கு, மறுமுறை **Promote Option-ஐ** உபயோகிக்க இயலாது.)



## STEP 6:

**Students Promoted Successfully என்ற pop-up message தோன்றும்.**




இதுபோன்று, பிற வகுப்பிற்கும் **Students Promotion option**-ஐ பயன்படுத்தி **Promote** செய்துகொள்ளலாம்.

குறிப்புகள்:

1. **Single Right Arrow (>)** குறிப்பிட்ட மாணவர்களை **"Students in selected class"** களத்திலிருந்து **"Students to be promoted"** களத்திற்குக் கொண்டு செல்ல உதவும்.
2. **Single Left Arrow (<)** குறிப்பிட்ட மாணவர்களை **"Students to be promoted"** களத்திலிருந்து **"Students in selected class"** களத்திற்குக் கொண்டு செல்ல உதவும்.
3. **Double Right Arrow (>>)** அனைத்து மாணவர்களையும் **"Students in selected class"** களத்திலிருந்து **"Students to be promoted"** களத்திற்குக் கொண்டு செல்ல உதவும்.
4. **Double Left Arrow (<<)** அனைத்து மாணவர்களையும் **"Students to be promoted"** களத்திலிருந்து **"Students in selected class"** களத்திற்குக் கொண்டுச்செல்ல உதவும்.
5. **To** பகுதியில் ***Class & Sec** மற்றும் * மாணவர் பட்டியல் **(Students to be promoted** களத்தில்) தேர்வுசெய்த பின்னரே, **Promote** என்ற **Button** திரையில் தோன்றும்.
6. **Depromote** (அ) **Double Promote** செய்ய இயலாது.

## FAQ’s:

**Q1. எப்பொழுது தேர்ச்சி (promotion) கொடுத்து ஒரு மாணவரை அடுத்த வகுப்பிற்கு அனுப்பவேண்டும்?**

**Ans:** கல்வி ஆண்டின் இறுதியில் **5, 8, 10 & 12-** ஆம் வகுப்பு மாணவர்களுக்கு **TC** கொடுத்த பிறகு தேர்ச்சி **(promotion)** செய்ய வேண்டும்.

**Q2.** இறுதி வகுப்பு மாணவர்களை **Common pool** க்கு **Terminal Class Option** ஐ தேர்வு செய்து அனுப்பிய பின்பு என்ன செய்ய வேண்டும் ?

**Ans:**மேல் நிலைப்பள்ளி **- Move 12th to common pool** தேர்ச்சி **11->12,10-> common pool,9->10** தேர்ச்சி **,8->9** தேர்ச்சி**,7->8** தேர்ச்சி**,6->7** தேர்ச்சி**, 6th New admission_Regular Student**

**Q3. EMIS** மூலம் மாணவ/மாணவியர்களுக்கு தேர்ச்சி வழங்கும் போது செய்யக் கூடாத நடவடிக்கை என்ன ?

**Ans:EMIS** மூலமாக மாணவ/மாணவியர்களுக்கு தேர்ச்சி வழங்கும் போது மாணவ/மாணவியர்கள் பயிலும் வகுப்பிலிருந்து அடுத்து அடுத்து வகுப்பிற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலைக்கு மாற்ற கூடாது.

**Q4.** நடுநிலைப்பள்ளிகள் தங்கள் **5-** ஆம் வகுப்பு மாணவர்களை நேரடியாக **6-** ஆம் வகுப்பிற்கு தேர்ச்சி **( promotion)** வழங்கலாமா**?**

**Ans:**ஆம். வழங்கலாம்.

**Q5.** ஒரு வகுப்பின் அனைத்து மாணவர்களையும் ஒரே நேரத்தில் **(Select)** தேர்வு செய்து மறு வகுப்பிற்கு அனுப்ப இயலுமா**?**

**Ans:**ஆம். தேர்வு செய்த வகுப்புக்கும் தேர்ச்சி வழங்க வேண்டிய வகுப்பிற்கும் இடையில் உள்ள **(>> )** குறியை பயன்படுத்தி அனைத்து மாணவர்களளயும் ஒரே நேரத்தில் அடுத்த வகுப்பிற்கு மாற்றலாம்.

**Q6.** தேர்வு செய்த ஒரு வகுப்பு மாணவர்களை ஒரே பிரிவில் இருந்து அடுத்த உயர் வகுப்பின் வெவ்வேறு பிரிவிற்கு மாற்ற இயலுமா**?**

**Ans: 'A'-**பிரிக்கு தெறிவு செய்த மாணவர்களை ஒவ்வொருவராக தேர்வு செய்து **( >)** வலப்பக்க அம்புகுறியை பயன்படுத்தி தேர்ச்சி வழங்க வேண்டும்.

***